# 6 விளையாட்டு விதிமுறைகளை மதித்து விளையாடுவோம்



ஓய்வு நேரங்களில் உங்கள் நண்பர்களுடன் ஒன்று சேர்ந்து விளையாடும் சிறுவிளையாட்டுகளை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள். மரம் இடம் மாறுதல், யார் ராஜா, கட்டம் பாய்தல் போன்ற விளையாட்டுகளின் போது மரத்தைப் பிடிக்க முடியுமானவர் தோல்வியடைதல், வட்டத்திற்கு வெளியே தள்ளப்படுபவர் தோல்வியடைதல், கோட்டை மிதிப்பவர் விளையாட்டிலிருந்து நீக்கப்படுதல், போன்ற விதிமுறைகளை நீங்கள் அவதானித்தீர்கள். பிரச்சினைகளைத் தவிர்த்து விளையாட்டில் ஈடுபட இவ்வாறான விதிமுறைகள் உதவுகின்றன.

விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து விளையாட்டு வீரர்களும் சட்டதிட் டங்களைக் கடைப்பிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இதனையும் மீறி சர்வதேசப் போட்டிகளில் வெற்றி பெற்று உலகப்புகழ் பெற்ற வீர வீராங்கனைகள் சட்டவிரோதமாக ஊக்க மருந் துகளை உட்கொண்டே வெற்றி பெற்றார்கள் என மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதால், அவர் களுக்கு போட்டியில் பங்கேற்பதற்கான தடை விதிக்கப்பட்டதுடன், வழங்கப்பட்ட பதக்கங்க ளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நீங்கள் இவ்வலகைக் கற்பதன் மூலம் விளையாட்டுச் விதிமுறைகளை மதிக்கும் திறனையும் பண்பாக விளையாடும் திறனையும் பெற்றுக்கொள்வீர்கள். அதுமட்டுமின்றி, அன்றாட வாழ்க்கையிலும் சமூக விதிமுறைகளைப் பின்பற்றிப் பண்புள்ள மனிதனாக செயற்படுதல், ஒருவருக்கு ஒருவர் மதிப்பளித்தல், எதிர்க்கருத்துகளைச் செவிமடுத்தல் போன்ற பண்புகளையும் கற்றுக் கொள்வீர்கள்.

## விளையாட்டு விதிமுறைகள்
(Rules and Regulations in sports)

விளையாட்டுகளை நடாத்துவதற்கும், வீரர்களின் பாதுகாப்புக்கும் என அமுல்படுத்தப்படும் எல்லைகள் விளையாட்டு விதிமுறைகள் எனப்படும். விளையாட்டுக்கு விளையாட்டு இவ் விதிமுறைகள் மாறுபடும்.

விளையாட்டு விதிமுறைகளை மீறுவது தண்டனைக்குரிய குற்றம் ஆகும்.
விளையாட்டு விதிமுறைகள் காலத்தின் தேவைக்கேற்ப மாறுபடும்.

## விளையாட்டு ஒழுக்க நெறிகள் (Ethics)

**விதிமுறைகளைப் பேணுவதற்குத் தேவைப்படும் நற்பழக்கவழக்கங்கள் சம்பிரதாயங்கள் என்பன ஒழுக்க நெறிகள் எனப்படும்.**

விளையாட்டின் கௌரவத்தைப் பேணுவதற்கு விளையாட்டுச் விதிமுறைகள், விளையாட்டுப் ஒழுக்கநெறிகள் ஆகியன உதவுகின்றன. விளையாட்டின் போது விளையாட்டு விதிமுறைகளை மதிக்காது அவற்றை மீறும் சந்தர்ப்பங்களில் ஒழுக்கம் தவறியமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.




உரு 6.1 வெற்றியை ஏற்றுக் கொள்ளல்



உரு 6.2 வெற்றி தோல்விகளை சுமுகமாக
உரையாடித் தீர்த்தல்

## விளையாட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுக்க நெறிகளின் முக்கியத்துவம்

அட்டவணை 6.1




விளையாட்டுச் விதிமுறைகள், மற்றும் விளையாட்டு ஒழுக்க நெறிகளுடன் ஏற்ப போட்டிகளை நடாத்துவதனால் ஒவ்வொருவருள்ளும் விளையாட்டுப் பற்றிய நல்லெண்ணம் ஏற்பட்டு, போட்டிகளில் பங்குபற்றுவதற்கான ஆர்வமும் தோன்றும். அவ்வாறான போட்டிகளில் வீரர்கள் உற்சாகமாக பங்கேற்பதோடு, இவ்வாறான போட்டிளைப் பார்வையிடுவதில் ரசிகர்களும் மிகுந்த ஆர்வம் காட்டுவர்.

விளையாட்டில் பங்குபற்றுவதும், அதனால் மன மகிழ்வு ஏற்படுவதுமே விளையாட்டின் பிரதான நோக்கமாகும். ஆகவே வீரர்கள் விதிமுறைகளை


மதித்து விளையாட்டில் ஈடுபடுவது முக்கியமாகும். அதேபோல் பார்வையாளர்கள் சிறந்த ஒழுக்கத்துடன் போட்டியை ரசிப்பதும் அவசியம் ஆகின்றது.



உரு 6.3 ஆர்வத்துடன் விளையாட்டை பார்வையிடும் ரசிகர்கள்

விளையாட்டில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் பலவிதமான மனிதர்களுடன் இணைந்து செயற்பட நேரிடுகின்றது. இதன் போது பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட பண்புகளை வளர்க் கின்றன. அப் பண்புகளுள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- குழுக்களுடன் ஒற்றுமையாகச் செயற்படல்.
- மற்றவர்களின் கருத்துகளைச் செவிமடுத் தலும், மதிப்பளித்தலும்.
- தலைமைத்துவத்தை மதித்தல்.
- பொறுமையைப் பேணல்.
- வெற்றி தோல்வியைச் சமமாக ஏற்றுக் கொள்ளல்.
- தாங்கிக் கொள்ளும் திறன் மேம்படல்.
- ஒழுக்கநெறி தவறாது மதிப்புடன் இருத்தல்.
- மனஅழுத்தங்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுத்தல்.




உரு 6.4

மேற்குறிப்பிட்ட பண்புகள் உங்கள் எதிர் காலத்தைச் சிறப்பாக வழிநடத்திச் செல்ல உதவும்.

விளையாட்டுகளில் ஈடுபடும் போது பல விபத்துகள் ஏற்படுவதைக் காணலாம். அவ்வாறான விபத்துகளைக் குறைப்பதற்குப் பின்வரும் விடயங்களில் விழிப்பாயிருத்தல் வேண்டும்.

- விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.
- தேவைகளுக்கு ஏற்ப விளையாட்டு மைதானத்தை ஒழுங்குபடுத்தல்.
- உரிய விதிமுறைக்களுக்கமைவான விளை யாட்டு உபகரணங்களை பாவித்தல்
- பொருத்தமான ஆடைகள், மற்றும் கால ணிகளை அணிதல்
- வயதிற்கு ஏற்ற பயிற்சிகளை மேற்கொள்ளல்
- அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப் பாளரிடமிருந்து பயிற்சிகளை பெற்றுக் கொள்ளல்.



உரு 6.5

வியைாட்டுக் குழுவொன்றுக்கு அல்லது போட்டியொன்றுக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் போது விதிமுறைகளுக்கும் தகுதிக்கும் அமையத் தெரிவு செய்வதனால் பிரச்சினைகளை இழிவளவாக்கிக் கொள்ளலாம். விளையாட்டில் நீங்கள் காட்டும் அர்ப்பணிப்பு, ஆர்வம், சட்டத்தை மதிக்கும் தன்மை, விழுமியத்தன்மை என்பவற்றை உங்கள் நாளாந்த வாழ்விலும் கடைப்பிடிப்பதால் வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ளலாம். விளையாட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுக்கங்களைப் பேணாது செயற்படும் போது கீழ்வரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க நேரிடும்.

- போட்டியிலிருந்து விலக்கப்படல்
- போட்டிகளுக்குத் தடைவிதிக்கப்படல்
- மற்றவர்களின் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கு ஆளாதல்
- நண்பர்களிடையே அவமானப் படல்
- சமூகத்தால் ஏற்றுக்கொள்ளாப்படாத நபராக மாறுதல்.



உரு 6.6

## விளையாட்டு விதிமுறைகள், ஒழுக்கநெறிகளைப் பேணுவதால் கிடைக்கும் பண்புகள்

சட்டவிதிகள் மற்றும் நற்பண்புகள் போன்ற அம்சங்களை வாழ்க்கையில் பேணுவதால் ஒற்றுமையான சமுதாயத்தை உருவாக்கலாம். அன்றாட வாழ்க்கையில் உங்கள் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் சிறந்த ஒழுக்க நெறிகளைப் பேணுவதால் உங்களால் நல்லதோர் தொடர்பை மேம்படுத்திக் கொள்ளலாம். நண்பர்களுடன் இணைந்து விளையாடுவதன் மூலம் வாழ்க்கைக்கு அவசியமான சிறந்த பண்புகளைப் பெற்று எதிர்காலத்தில் பண்பு மிக்க ஒரு நற்பிரசையாக சமூகத்தில் மிளிரலாம்.

### செய்து பார்ப்போம்

1. உமது பிரதேசத்தில் சர்வதேச அல்லது தேசிய ரீதியாக விளையாட்டுகளில் பங்கு கொண்டு விளையாட்டு விதிகளையும் பண்புகளையும் மீறியோர் பற்றிய விபரங்களைக் சேகரியுங்கள்.

2. நீங்கள் கற்ற விளையாட்டு விதிமுறைகளையும் நற்பண்புகளையும் உங்கள் குடும்பத்தினருடன் கலந்துரையாடி அவர்கள் அறிந்த சம்பவங்களையும் சேகரியுங்கள்.

### இப்போது நாம் விளங்கிக் கொள்வோம்

விளையாட்டுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், வீர வீராங்கனைகளின் பாது காப்பிற்காகவும் விளையாட்டு விதிமுறைகள் மற்றும் விளையாட்டு ஒழுக்கநெறிகள் உருவாக்கப்பட்டுள்ளன. விளையாடுவதற்கும், உண்மையான வெற்றியைப் பெறுவதற்கும் விதிமுறைகள் அவசியமாகும். விளையாட்டின் போது போட்டித்தன்மை மற்றும் மன மகிழ்ச்சிக்காகவும் விளையாட்டின் விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படுவதனால் அன்றாட வாழ்வில் பண்புள்ள நபராக சமுதாய அமைப்பிற்குள் நுழையலாம். சமூகத்தின் விதிமுறைகளுக்கு மாறாகச் செயற்படுவீர்கள் ஆயின் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

## முயன்று பார்ப்போம்

**கீழே தரப்பட்ட விடயம் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×)எனவும் அடையாளம் இடுக.**

1. விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பிற்கு விளையாட்டு விதிமுறைகள் அவசியமாகும். ( )

2. விளையாட்டு ஒழுங்கமைப்புக் குழுவால் விளையாட்டுகளுக்கேற்ப வழங்கப்படும் எல்லைகளே விளையாட்டுப் பண்புகளாகும். ( )

3. விதிமுறைகளுக்கு அமைவாக நடக்கும் விளையாட்டுப் போட்டியை பார்வையிட ரசிகர்கள் விரும்புவர் ( )

4. விதிமுறைகள் இல்லாதபோது விளையட்டின் கௌரவம் பாதுகாக்கப் படும். ( )

5. விளையாட்டு விதிமுறைகளை மீறும் போது தண்டனை வழங்கப்படும் ( )

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை எழுதுக**

1. நீங்கள் அறிந்த விளையாட்டு விதிமுறைகள் சிலவற்றை எழுதுங்கள்.

2. விளையாட்டு விதிமுறைகள், ஒழுக்க நற்பண்புகள் என்பவற்றின் அவசியத்தைக் குறிப்பிடுங்கள்.

3. விளையாட்டு விதிமுறைகள் மற்றும் விளையாட்டு நற்பண்புகளை பேணாமையினால் ஏற்படும் அசௌகரியங்கள் 3 தருக.